2026 ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 32/2021

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW17 (LW24) – Dr.சுல்தான் ஷாகுல் ஹமீது |
| தகப்பனார் பெயர்: | அபுல் ஹசன் |
| ஊர்: | இராமநாதபுரம் |
| வட்டம்: | இராமநாதபுரம் |
| மாவட்டம்: | இராமநாதபுரம் |
| தொழில்: | முதுநிலை துணை பேராசிரியர், இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை |
| வயது : | 45 |

11.08.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி இராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலிருந்து காணொளி மூலம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 29.02.2020ம் தேதி மதியம் 1.30 மணியளவில் நான் மருத்துவமனையில் பணியிலிருந்தபோது, இராமநாதபுரம் வட்டாட்சியர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் ரகுநாதபுரம்

அருகில் உள்ள காரான் சேதுநகர் கடற்கறையில் புதைக்கப்பட்டு, தோண்டி எடுக்கப்பட்ட செல்லப்பாண்டி (வயது 44/2020) என்பவரது பிரேதத்தின்மீது பிரேத பரிசோதனை மதியம் 3.30 மணிக்கு தொடங்கி 4.30 மணி வரை செய்தேன்.

2. பிரேத பரிசோதனையில் செல்லப்பாண்டி என்பவரது உடல் தீயில் கருகி, அழுகிய நிலையில் வலது கால் தொடை எலும்பு, தீக்கருகிய உடல் உறுப்புகள், தீயில் கருகிய மணல் சிறிதளவு மற்றும் தீப்படாத மண் சிறிதளவு ஆகியவற்றை சேகாரம் செய்து, அவற்றை கனம் ஆண்டிபட்டி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி அவர்களிடமிருந்து பெற்ற தபாலின் அடிப்படையில் சேகாரம் செய்யப்பட்ட வலது கால் தொடை எலும்பை மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு DNA பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன்.

3. DNA பரிசோதனை அறிக்கையில் கொலையுண்ட செல்லப்பாண்டியனின் உடம்பில் இருந்து எடுக்கப்பட்ட தொடை எலும்புடன் மேற்படி செல்லப்பாண்டியனின் மகன் நந்தீஷ்குமார் என்பவரின் ரத்தம் மாதிரியுடன் ஆய்வு செய்ததில் மேற்படி தொடை எலும்பும், இரத்த மாதிரியும் 99.9999998 % ஒத்துப்போனதால் சான்று வழங்கப்பட்டு இருந்தது. என்னிடம் காட்டப்படும் அறிக்கை நான் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கை ஆகும். அது **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அறிக்கை நான் கொடுத்த மருத்துவ இறுதி அறிக்கையாகும். அந்த மருத்துவ இறுதி அறிக்கை **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

4. என்னை காவல் ஆய்வாளர் எந்த தேதியில் எத்தனை மணிக்கு, எத்தனை முறை விசாரித்தார் என்றால் ஒருமுறை விசாரித்தார், எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை, தேதி ஞாபகமில்லை. யார்

எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்கள் என்றால் தாசில்தார் மூலமாக எனக்கு வந்தது. யார் கொடுத்தார்கள் என்றால் காவலர் கொடுத்தார்கள். வழக்கின் சரித்திரம் வேண்டுகோள் கடிதத்துடன் வழங்கப்பட்டது என்றால் கொலை வழக்கு என்று கூறினார்கள். வேண்டுகோள் கடிதத்தில் சம்பவம் யாரால் எப்படி நடந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சம்பவம் குறித்து சொல்லப்படவில்லை, ஸ்பாட் பிரேத பரிசோதனைக்கு அழைத்தார்கள்.

5. நான் ஸ்தலத்தில் பிரேத பரிசோதனை செய்தபோது, சம்பவம் குறித்து எந்த விபரமும் தெரியாமல் பிரேத பரிசோதனை செய்தேன் என்றால் நான் பிரேத பரிசோதனை செய்த இடத்திற்கு சென்றபோது, சிறு வயதுடைய 30 வயதிற்குட்பட்ட ஒரு எதிரியை போலீசார் அழைத்துவந்து, எந்த இடத்தில் சடலம் புதைக்கப்பட்டுள்ளது என்று கேட்டப்போது, அவர் ஒரு இடத்தை காண்பித்தார், அந்த இடத்தை தோண்டி, சடலத்தை எடுத்தப்போது அங்கு பத்திரிக்கையாளர்கள், தாசில்தார், நான், போலீசார் ஆகியோர் இருந்தோம், தோண்டி எடுக்கும்போது, எரிக்கப்பட்ட பொருட்கள், சடலத்தின் வலது தொடை எலும்பு மட்டும் இருந்தது, அதை எடுத்து நான் தடயல அறிவியல் DNA பரிசோதனைக்கு அனுப்பினேன்.

6. தோண்டிய போதும், பிரேத பரிசோதனை செய்தபோதும், பத்திரிக்கையாளர்களும், போலீசாரும் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தார்கள் என்றால் சரிதான். நான் எனது அறிக்கையில் எடுக்கப்பட்ட எலும்பை DNA பரிசோதனைக்கு அனுப்பியதாக அ.சா.ஆ.14–ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை செய்த நேரம் 3.30 என்பது 2, 3 முறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், என்னை பிரேத பரிசோதனை செய்த இடத்திற்கு அழைத்து சென்ற நேரம் 3.00 மணியாகும், பிரேத பரிசோதனை செய்தது 3.30 மணியாகும், நான் தான் திருத்தம் செய்தேன். பிரேத பரிசோதனையை குழியிலிருந்து எடுத்து, மேட்டில் வைத்தப்போது செய்தேன்

என்றால் குழிக்குள் இருந்த வலது தொடை எலும்பு மட்டும் (Right femur bone) எடுத்தேன், மற்ற உடல் உறுப்புகள் கருகப்பட்ட நிலையில் இருந்தன.நான் வேறு எதையும் பார்க்கவில்லை.

7. எவ்வாறு எலும்பு Packing செய்யப்பட்டது என்றால் போலீசார் Packing செய்து DNA பரிசோதனைக்கு அனுப்பியதாக சொன்னார்கள். Right femur bone–ன் அளவு, எடை, உயரம், பருமன் ஆகியவற்றை எனது அ.சா.ஆ.14 அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Right femur bone–ன் அளவு, எடை, உயரம், பருமன் ஆகியவற்றை வைத்து அந்த மனிதனின் உயரம், எடை ஆகியவற்றை கணித்து கூறமுடியும் என்றால் சரிதான், எடை சொல்லமுடியாது, வயது மட்டும் கணிக்க முடியும். உயரத்தை கணிக்க முடியாது என்று மருத்துவ அறிவியலுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்ததாக சொல்லப்படும் உடல் பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டிருந்ததால் அந்த உடம்பில் உள்ள சதைகள் முழுமையாக எரிந்திருக்கும் என்றால் சரிதான்.

8. வெப்பத்தாக்கத்தின் காணரமாக அந்த உடலில் உள்ள எலும்புகள் அதன் தன்மையை இழந்து சேதமடைந்திருக்கும் என்றால் வாய்ப்புள்ளது. DNA பரிசோதனை அறிக்கையில் இரண்டு ஜீன்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் DNA பரிசோதனை நிபுணரிடம் தான் கேட்க வேண்டும். செல்லப்பாண்டியின் உடலில் இருந்த எலும்பு என்று முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல்துறையினர் வேண்டுகோளுக்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.08.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.11 20:39:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.08.2026